# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார் | வணிக மாத இதழ்

Volume: 12 | Issue : 10 | JANUARY 2024 | Tamil & English Monthly | Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE






சிங்கப்பூர்-மலேசியா

6 நாட்கள்

Trichy to Trichy

01-03-2024

All Inclusive Rs.92,500* per person

BOOK NOW

97 87 066 066

VH VEDHAVALLI HOLIDAYS

வேதவல்லி ஹாலிடேஸ்

82/235, காமராஜர் சாலை, மதுரை




## ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் புதிய அலுவலக வளாகத்தில் நடைபெற்ற முதல் தொழில் வர்த்தக கூட்டம்



சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழக டெக்ஸ்டைல் துறையின் உதவி இயக்குநர் திரு. **எஸ். செந்தில் குமார்** அவர்கள் பேசுகிறார்


கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட ரூபி ஃபுட் பிராடக்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும் மடீட்சியாவின் உடனடி முன்னாள் தலைவருமான திரு. **எம்.எஸ். சம்பத்** அவர்கள் பேசுகிறார்

கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட பிளாஸ்மா தலைவர் திரு. **வி.ஆர். சேகர்** அவர்கள் பேசுகிறார்



மின் கட்டண உயர்வை ரத்து செய்யக் கோரி தமிழ்நாடு தொழில்துறை மின் நுகர்வோர் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் மனித சங்கிலி போராட்டத்தில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் நிர்வாகிகள்

To

SOWBHAGYAAS

வையம் போற்றும்
வைரநகைகளின் அணிவகுப்பு
சௌபாக்கியாஸ் தனிச்சிறப்பு

Custom making is our specialty...
Creating your unique designed
Jewellery is our passion....

சௌபாக்கியாஸ்

வைரம் ✪ தங்கம் ✪ வெள்ளி

18A/1, மஞ்சணக்காரத்தெரு, மஹால் 7வது தெரு,
மதுரை-1. Ph.: 0452-4365522 Cell : 98410 19536





அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

METRO

**மெட்ரோ ஷூ மார்ட்**

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

PH : 23322364, 2331297, 4382343



TEXMO®

Borewell Submersibles
Single Phase Domestic Pumps
Single Phase Jet Pumps

AQUA GROUP

Authorised Dealer :

**Sri Balameenakshi Aqua Pumps**

AQUATEX®

Agricultural Monoblocks
Open-well Submersibles
Pressure Boosting Systems

124, West Masi Street, Near Murugan Temple, Madurai - 625 001. Cell : 93616 25696

**H.O. : Madurai Pipes**

76, South Avani Moola Street, Madurai - 625 001. Phone : 0452 - 4378524, Cell : 94437 95317
B.O. : 32A, Athikulam Main Road, New Natham Road, Madurai - 625 014. Cell : 99946 57349






Prop.: B.S. Rajan

- CCTV Camera
- Long Distance Monitor
- Security Alarm
- Digital Video Recorder
- Voice Records
- Access Control System
- Firm Alarm
- Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

**A TO Z CCTV SYSTEMS**
CCTV Camera Exclusive Showroom

*Head Office :*
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

*Branch Office :*
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

**உங்கள் உடல்
எடையை பராமரிக்க
குறைக்க / அதிகரிக்க
விரும்புகிறீர்களா?**

- உங்கள் விருப்பமான உணவை தவிர்க்காமல்.
- கடின உடற்பயிற்சி இல்லாமல்.
- பாதுகாப்பு மற்றும் அதிக பயன்.
- உங்கள் குடும்பத்தில் உள்ள அனைவரும் சரியான எடையில் ஆரோக்கியமாக இருக்க

**ஆலோசனை பெற அணுகவும்**

**L.N.R. தாமோதரன் - 98431 71477**



# தலைவர் அறிக்கை

அல்கிதெ ஃகோ மொன்னு பொரெ

## நமஸ்கார்...

**T.R.மோகன்ராம்**
**தலைவர்**

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் துவங்கியது முதல், 18 ஆண்டுகளாக இரண்டாவது தளத்தில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வந்தது.

இந்த மாதம் ஜனவரி 2024 முதல் புதிய முகவரியில், தரைத்தளத்தில் புதுப்பிக்கப்பட்ட கட்டிடத்தில் இடம்பெயர்ந்துள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதற்கு முக்கிய காரணமான நமது சேம்பர் இணைச் செயலாளர் திரு. வி.வி. ராம்லக்ஷ்மண்ஜி, பொருளாளர் திரு. ஏ.பி. குமரேஷ் பாபு மற்றும் சிறப்பு அழைப்பாளர் திரு. இ.எஸ். ரமேஷ் பாபு ஆகியோருக்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகம் மனமுவந்து நன்றி பாராட்டுகிறது.

மிகப்பெரிய இந்த செயலினால், முன்னாள் தலைவர்கள், சமூக முக்கியஸ்தர் போன்றவர்கள் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் துவங்கியது முதல் சேம்பர் வளர்ச்சிக்காக முக்கியப் பங்காற்றியவர்களின் பட்டியலில், இவர்களின் பெயரும் சேம்பரின் வரலாற்றில் முக்கிய மைல்கல்லாக இருக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், சேம்பர் செயற்குழு உறுப்பினர், கட்டிடக் குழு சேர்மன் திரு. கே.கே. தினகரன் அவர்களின் குழு தலைமையில் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டது குறிப்பிடத்தக்கது. இதனைத்தொடர்ந்து அவரின் செயல்பாட்டில், நமது சேம்பருக்கு சொந்த கட்டிடம் வாங்குவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. விரைவில் அதற்கான நல்ல மாற்றம் நிகழும் என்று நம்புகிறேன்.



இடமிருந்து வலம்: உடனடி முன்னாள் தலைவர் திரு. குமரன் B. ஜகுவா, முன்னாள் தலைவர் திரு. K.K.G. பிரபாகரன், இணைச் செயலாளர் திரு. V.V. ராம்லக்ஷ்மண்ஜி, பொருளாளர் திரு. A.B. குமரேஷ் பாபு, தலைவர் திரு. T.R. மோகன்ராம், சிறப்பு அழைப்பாளர் திரு. E.S. ரமேஷ் பாபு மற்றும் முன்னாள் தலைவர் திரு. E.R. குமரேசன்

SOURASHTRA CHAMBER OF COMMERCE

# BOARD OF MEMBERS YEAR 2022-2024

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| T.R. Mohanram | President | 93441 01432 |
| Kumaran B. Jaghuva | Imm. Past President | 99949 26348 |
| K.K. Dinesh | Vice President | 98421 16461 |
| K.K. Kubendran | General Secretary | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | Treasurer | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Joint Secretary | 94439 30728 |
| T.R. Saravanan | Joint Secretary | 92446 84702 |
| **EC Members** | **Team-Chairmen** | **Contact** |
| V.G. Ramdoss | International Affairs | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | Administration | 90809 51577 |
| S.G. Srinivasan | Greetings | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Public Relation | 93441 52068 |
| A.R. Ganesan | Cultural & Food | 98421 75804 |
| B.S. Janaarthanan | Members Liason | 97905 75650 |
| G.R. Subramanian | Membership Retain | 94427 52044 |
| T.K. Sivanath Babu | Growth & Development | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | Bulletin | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | Political Affair | 98655 45048 |
| N.S. Prem Kumar | Govt. Relation | 99945 35350 |
| K.K. Dinakaran | Building & Fund Raising | 98409 60833 |
| K.V. Kumaresan | Entertainment | 98940 51735 |
| S.S. Ramsundar | Publicity | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | Social Media | 94422 44648 |
| T.M. Rubesh Babu | Program | 95000 35200 |
| S.S. Premkumar | IT | 96293 42295 |
| S.R. Sundarnath | Community Relation | 92444 03917 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| K.K. Karunakaran | | 98409 60844 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |

| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| S.M. Karthi Kumaran | Chairman | 94438 31496 |
| K.B. Sivaprakash Babu | Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | Member | 99524 22260 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- K.K. சுபேந்திரன்

**19.12.2023** – ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் 14வது செயற்குழு கூட்டம் சேம்பர் வளாகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சேம்பர் குழுவினர் பலர் கலந்து கொண்டனர்.

**27.12.2023** – தமிழக அரசிடம் மின்கட்டண உயர்வு ரத்து செய்யக் கோரி தமிழ்நாடு தொழில்துறை மின்நுகர்வோர் கூட்டமைப்பின் ஏற்பாட்டில் நடைபெற்ற மாபெரும் மனித சங்கிலி போராட்டத்தில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

**29.12.2023** – உலக முதலீட்டாளர்கள் மாநாட்டின் பெருந்திரள் கூட்டம் மதுரை மடீட்சியா அரங்கில் நடைபெற்றது. இதில் பங்கேற்க மதுரை மாவட்ட தொழில் மையத்திலிருந்து நமது சேம்பருக்கு கிடைத்த அழைப்பினை ஏற்று நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**02.01.2024** – புத்தாண்டி முதல் நிகழ்ச்சியாக, புதிய கட்டிடத்தில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் மாதாந்திர கூட்டம் மாலை 6 அளிவல் நடைபெற்றது. இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு டெக்ஸ்டைல் துறையின் துணை இயக்குநர் திரு. எஸ். செந்தில் குமார் அவர்களும், கௌரவ விருந்தினராக ரூபி நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும், மதுரை மடீட்சியாவின் உடனடி முன்னாள் தலைவருமான திரு. எம்.எஸ். சம்பத் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர். இந்த கூட்டத்தில், 2024ம் ஆண்டிற்கான காலண்டர் வெளியீடு செய்யப்பட்டது. இதனை பிளாஸ்மா அமைப்பின் தலைவர் திரு. வி.ஆர். சேகர் அவர்கள் வெளியீடு செய்தார்.

**07.01.2024** – சென்னையில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிற்கு சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

26.01.2024 – அன்று மாலை 6 மணிக்கு, வி.எஸ். செல்லம் சரஸ்வதி அரங்கில், நமது ஸௌராஷ்ட்ரா சேம்பர் ஆப் காமர்ஸ்–ன் 18ம் ஆண்டு துவக்க விழா, நிறுவனர் தின விழா, குடியரசு தின விழா என முப்பெரும் விழாவாக கொண்டாட இருக்கிறோம். சேம்பர் அங்கத்தினர்கள் அனைவரும் குடும்பத்துடன் கலந்து கொண்டு சிறப்பிக்க அழைக்கிறாம்.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- S.M. கார்த்தி குமரன்

# அகங்காரம்

பல வருடங்களுக்கு முன்பு, கேரளத்தின் பிரபல நடிகர் மம்மூட்டி அவர்கள் ஒரு முறை கேரளாவில் காரில் பயணம் செய்து கொண்டிருந்தார். இரவு நேரம். சாலையில் ஒரு முதியவர் அவசர உதவிக்காக கையசைத்துக் கொண்டிருந்தார். அவரைத் தாண்டிச் சென்ற கார், அவருக்காக திரும்பியது.

அந்த முதியவர், மம்மூட்டியிடம், தனது மகளின் பிரசவத்திற்கு மருத்துவமனை செல்ல உதவி கோரினார். அவரும் அதனை ஏற்று மருத்துவமனைக்கு சென்று சேர்த்தார்.

அந்த சமயத்தில் அந்த முதியவர் அவசர உதவி செய்த மம்மூட்டியிடம் நன்றி தெரிவிக்கும் விதமாக தன்னிடம் இருந்த இரண்டு ரூபாயை கொடுத்தார்.

மம்மூட்டி அவர்கள் தான் யார் என்று தெரிகிறதா என்று கேட்க, முதியவரோ யார் என்று தெரியவில்லை என்று கூறினார். மம்மூட்டி அவர்களுக்கு மிகுந்த அதிர்ச்சி.

சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை, சிட்டி முதல் பட்டி தொட்டி வரை நாம் புகழ்மிக்கவர் என்று கருதினோம். ஆனால், ஒரு முதியவர் தான் யார் என்று தெரியாது என்று கூறி, உதவிக்கு அன்பளிப்பாக இரண்டு ரூபாயை கொடுத்து, நமது அகங்காரத்தை போக்கிவிட்டாரே என்று நினைத்தார்.

அன்று முதல் இன்று வரையில், நடிகர் மம்மூட்டி அவர்கள், தான் எவ்வளவு சம்பாதித்தாலும், நாம் ஒரு பெரிய பிரபலமான நடிகர் என்ற அகங்காரத்தை வளர்த்துக்கொள்ளக் கூடாது என்பதற்காக, அதன் நினைவாக அந்த முதியவர் அளித்த இரண்டு ரூபாயை இன்று வரையில் ஃபிரேம் போட்டு வீட்டுச் சுவரில் மாட்டி வைத்துள்ளார்.

உண்மையில் நாம் எவ்வளவு தூரம் உயர்ந்தாலும், நம் நிலை மறவாமல் செயல்பட வேண்டும் என்பதற்கு இந்த நிகழ்வு ஓர் உதாரணம்.

வயலில் பயிர் வளரும்போது களையும் சேர்ந்தே வளரும், களையை வளர்க்கவிட்டால் பயிரை நாசமாக்கிவிடும். ஆகவே களையெடுத்துவிடுவது நன்று. அதுபோல, பணம், புகழ் கூடும்போது, சேர்ந்தே ஆணவம், அகங்காரம் வளரும். அதனை மட்டும் களையெடுத்துவிட்டால், நாம் உயர்நிலையை அடையளாம். நன்றி.

Exclusive Showroom for U'r Branded Products
IDEAL innerwear
ANAND
Viking
Prithvi INNER WEARS
NAIDU HALL THE FAMILY STORE
JOCKEY INNER WEAR
Poomex
MANGAI NIGHTIES
RASATHE DARLING NIGHTIES
YOKE'S NIGHTY
& All Branded Innerwears for All
Online Purchase for any Items Call 98941 41402 payments by G Pay PhonePe
Save Your Valuable Time, Money & Healthy Life.
THE B BABY SHOP
அலங்கார் தி பேபி ஷாப்
உள்ளாடைகள் உலகம்
280, காமராஜர் சாலை, விளக்குத்தூண்,
மதுரை - 625 009. அலைபேசி : 98941 41402
HP பெட்ரோல் பங்க் எதிர்புறம், SR காம்ப்ளக்ஸ் பில்டிங்,
மீனாட்சி நகர், வில்லாபுரம்,
மதுரை – 625 012. செல் : 98941 41402

*Best Compliments from*

# BVK GROUP

## Indus Finance Ltd
## Indowind Energy Ltd
## EverOn Power Ltd
## BeKae Properties P Ltd
## BVK Foundation

4th Floor (NW), Kothari Building, 114, M.G. Road, Nungambakkam, Chennai - 600 034.
No.603, Keshava - BKC, Mumbai - 400 051.

### ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் முப்பெரும் விழா கொண்டாட்டம்

## 18ம் ஆண்டு துவக்க விழா / நிறுவனர் தின விழா / குடியரசு தின விழா

அனைவரும் வருக!...

*நாள்*: **26.01.2024** , வெள்ளிக் கிழமை

*நேரம்*: **மாலை 6.01** மணி

*இடம்*: **வி.எஸ். செல்லம் சரஸ்வதி அரங்கம்**, காமராஜர் சாலை, மதுரை.



## ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் ஜனவரி மாத தொழில் வர்த்தக கூட்டம்

ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் புதிய அலுவலக வளாகத்தில் புத்தாண்டின் முதல் கூட்டம் 02.01.2024 அன்று மாலை 6 மணிக்கு நடைபெற்றது. க்ளஸ்டரும் அரசின் சலுகைகளும் என்ற தலைப்பில் நடைபெற்ற இந்த கூட்டத்திற்கு சிறப்பு விருந்தினராக தமிழக டெக்ஸ்டைல் துறையின் உதவி இயக்குநர் திரு. எஸ். செந்தில் குமார் அவர்களும், கௌரவ விருந்தினராக ரூபி ஃபுட் பிராடக்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரும், மடீட்சியாவின் உடனடி முன்னாள் தலைவருமான திரு. எம்.எஸ். சம்பத் ஆகியோர் கலந்து கொண்டனர். கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. டி.ஆர். மோகன்ராம் அவர்கள் தலைமைத் தாங்கினார். சேம்பர் நிகழ்ச்சிக் குழு சேர்மன் திரு. டி.எம். ருபேஷ் பாபு அவர்கள் கூட்டத்தை ஏற்பாடு செய்தார். திரு. எஸ். செந்தில் குமார் அவர்கள், தமிழக அரசின் டெக்ஸ்டைல் துறை சார்ந்த சலுகைகள் பற்றியும், க்ளஸ்டர் முறைக்கு தமிழக அரசு சலுகைகள் மற்றும் புதிய மாற்றங்கள் குறித்தும் விரிவாகப் பேசினார். திரு. எம்.எஸ். சம்பத் அவர்கள், க்ளஸ்டர் நன்மைகள் மற்றும் தொழில் வளர்ச்சி பற்றிப் பேசினார். இந்த கூட்டத்தில், 2024ம் ஆண்டிற்கான காலண்டர் ப்ளாஸ்மா அமைப்பின் தலைவர் திரு. வி.ஆர். சேகர் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. முதல் காலண்டர் சேம்பர் போஷக அங்கத்தினரும் இந்தோனேசியா தொழிலதபருமான திரு. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பெற்றுக்கொண்டார். அன்றைய தினம் வருகை தந்த அனைத்து சேம்பர் உறுப்பினர்களுக்கும் காலண்டர் வழங்கப்பட்டது. நிறைவாக, சேம்பர் பொதுச் செயலாளர் திரு. கே.கே. குபேந்திரன் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.


**Sowndarya Traders**

Dealers : Recron, Sleepwell, Suham, Glory, Centuary

T.G. Suraj Lal D.T.Tech
Mobile : 98436 - 20908
97869 - 48733



WASHABLE :
★ FANCY CURTAIN CLOTHS ★ BABY - PRODUCTS ★ PILLOWS, BEDS
★ BOLSTERS ★ CUSHIONS ★ QUILTS

57-A, Navabathkana Street, Madurai - 1.
Ph : 0452-4374869, E-mail : surajlal75@gmail.com

# ENERGY BAR

ADISHTU

FLAVOURS THAT

# IDEAL FOR

Health Conscious
Fitness Enthusiasts
Kids
Diabetic friendly food






NO Added Preservative
NO Added Sugar
NO Artificial Sweeteners
NO Added Chemicals
NO Artificial Flavour
NO Dairy, Soy, Gluten

adishtu
www.adishtu.com

## மதுரையில் நடைபெற்ற

# உலக முதலீட்டாளர்கள் மாநாடு

## பெருந்திரள் கூட்டம்

### ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் பங்கேற்றது

தமிழ்நாடு அரசு 2024 ஜனவரி 7 மற்றும் 8ம் தேதி உலக முதலீட்டாளர்கள் மாநாடு சென்னையில் நடத்தியது. இது குறித்த பரப்புரை கூட்டம் 29.12.2023 அன்று மதுரை மடீட்சியா அரங்கில் மதுரை மாவட்ட அளவிலான பெருந்திரள் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தை, மதுரை மாவட்ட தொழில் மையம் ஏற்பாடு செய்திருந்தது.

இவ்விழாவில், மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர். பழனிவேல் தியாகராஜன் அவர்கள் விழாப் பேருரை நிகழ்த்தினார்.

2030ம் ஆண்டுக்குள் 1 ட்ரில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பு கொண்ட பொருளாதாரத்தை எட்டுவதை நோக்கிய தமிழ்நாடு அரசின் தளர்வறியாப் பயணத்தில் முக்கிய படிநிலை இந்த உலக முதலீட்டாளர் மாநாடு 2024 ஆகும்.

பன்னாட்டு மற்றும் உள்நாட்டு முதலீடுகளை ஈர்க்கும் இந்த மாநாட்டில், மதுரை மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட முதலீட்டு ஈர்ப்பு இலக்கு ரூ. 1638.00 கோடி ஆகும். இதுவரை 190 நிறுவனங்கள் 5687 வேலைவாய்ப்புகளை உருவாக்க முதலீடு செய்திட முன் வந்துள்ளது. மேலும் முதலீடுகள் எதிர்பார்க்கப்படுகின்றன. இதில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ்-ன் மூலமாகவும் முதலீடுகள் ரூ. 140 அளவிற்கு விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

மேயர் இந்திராணி பொன் வசந்த், மண்டல தலைவர் புவனேஸ்வரி சரவணன், மாவட்ட தொழில் மைய இணை இயக்குநர் கணேசன், துணை இயக்குநர் ஜெயா, திட்ட மேலாளர் முகம்மது மசூது, பலர் கலந்து கொண்டனர். தொழில் நிறுவனங்கள் தொடங்கவும், தொய்வின்றி நடத்தவுமான அரசு சார் நடைமுறைகள், அரசு தரும் ஆதரவுகள், தொழில் நுட்பநிதி மேலாண்மை மற்றும் சந்தைப்படுத்துதல் குறித்து உரிய வங்கியாளர்கள் மற்றும் அலுவலர்கள் மற்றும் தொழில் துறையினர், வணிகர், தொழில் முனைவோர்கள் பலர் கலந்து கொண்டனர்.

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக நிர்வாகிகள் மற்றும் அங்கத்தினர்களும் கலந்து கொண்டனர். மேலும், ஜனவரி 7 & 8ம் தேதி நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டிலும் நமது சேம்பர் நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# Taxpayers may be allowed to file revised GST returns from April 2025

The government is considering allowing filing of updated orrevised returns under the goods and services tax (GST), amove expected to benefit taxpayers and also bring downlitigation under the indirect tax regime. As per the proposal,taxpayers will be able to rectify their returns includingcomputation of tax, ET has learnt. "We are looking atallowing updated returns under GST," a senior official toldET.

At present, there is no provision for filing revised returnsunder GST, barring minor corrections in the invoice detailsuploaded on the portal. Industry has been demanding thisfacility and a petition in this regard is before the SupremeCourt.

The facility is already available under income tax. "This willadd immensely to the ease of filing returns and reducelitigation where the intent is not to evade tax and a taxpayerhas either miscalculated or missed out on a detail," theofficial added.

The Central Board of Indirect taxes and Customs Isthrashing out the details that will then be taken up by thelaw committee of the GST Council and then by the council itself. The facility may be initially introduced for yearlyreturns then expanded to quarterly ones. It would take atleast 8-9 months post GST Council approval forimplementation as it would require a significant upgrade ofthe GST Network.

The GSTN will entrust the task to the next technologyvendor for the GST portal as the contract of the currentservice provider Infosys will end on September 30, 2024. "Ifeverything goes smoothly, we will be able to implement thenew facility by April 2025," an official from GSTN said.

"Just as the robust compliances continue to be thebackbone of GST, the GST return forms require timelyupdates to reflect the changing fiscal landscape, includingrevising the annual return form to reflect the altered inputtax credit reporting implemented in monthly returneffective August 2022," one of the experts said.

Another expert says hundreds and thousands of GST-registered persons and GST-registered dealers often makenatural human errors, such as calculation errors andcounting inaccuracies, which can be corrected if an optionfor revised returns is made available along with pre-filledreturns. "While the proposal would be helpful forbusinesses, it is essential to ensure that the data is pickedup on real time basis, validated and businesses should beable to edit all fields in the auto populated returns, and taxpayment computations should be based on the datapopulated by business," he said.

- atoztaxcorp




# சிறு, குறு
# தொழில் முனைவோர்களின் மனித சங்கிலிப் போராட்டம்

**தமிழ்நாடு தொழில்துறை மின் நுகர்வோர்கள் கூட்டமைப்பின் 8ம் கட்ட போராட்டம்**




தமிழ்நாடு தொழில்துறை மின் நுகர்வோர் கூட்டமைப்பு சார்பில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் 7 கட்டங்களாக போராட்டங்கள் நடைபெற்றது. ஆனால் தமிழக அரசு கோரிக்கைகளை நிறைவேற்றாத காரணத்தினால் 8ம் கட்டமாக கடந்த 2023 டிசம்பர் 27 அன்று மதுரை தெற்கு வாசலிலிருந்து கிரைம் பிரான்ச் வரை 1000க்கும் மேற்பட்ட சிறு, குறு தொழில் முனைவோர்களின் மனித சங்கிலி பேரணி காலை 11 மணி முதல் 1 மணி வரை நடைபெற்றது. இப்போராட்டத்தில் ஏராளமான தொழிற்சங்கங்கள் பங்கேற்று தமிழக அரசு நமது கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். இதில் நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் நிர்வாகிகளும் கலந்து கொண்டனர். நமது சேம்பர் சார்பாக, தலைவர் திரு. டி.ஆர். மோகன்ராம் அவர்கள் போராட்டத்தில் பேசினார்.

**Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account**

**Name : Sourashtra Chamber of Commerce**
**Bank : State Bank of India**
**Acct. No. : 30134805614**
**Branch : Madurai City**
**IFSC : SBIN0011544**

**தமிழ்நாடு தொழில்துறை மின் நுகர்வோர்கள் கூட்டமைப்பு வெளியிட்டுள்ள மனித சங்கிலி போராட்டத்திற்கான காரணங்கள்...**

★ HT மின் கட்டணத்தை விட LTCT மின் கட்டணம் அதிகம்.

★ தனியார் ஜெனரேட்டர்கள் இடம் மின்சாரத்தை விலை குறைவாக வாங்க அனுமதி இல்லை.

★ நமது போராட்டத்தினால் ஒன்றரை வருடம் கழித்து பீக் ஹவர் கட்டணம் 22 பைசா ரத்து செய்யப்பட்டது தற்காலிகமானதே...

★ TOD மீட்டர் பொறுத்திய பின் சரியாக மதிப்பிட்டால் 8 மணி நேரத்துக்கு 36 முதல் 49 பைசா செலுத்த நேரிடும்.

★ பராமரிப்பு கட்டணத்தை சர்வீஸ் ஒன்றுக்கு மாதம் 0-112 KW மொத்தமாக 30 ரூபாய் மட்டுமே... 15.03.2003 முதல் 31.07.2010 வரை ஏழு வருட காலமாக செலுத்தி வந்தோம். 01.08.2010 முதல் KW ஒன்றுக்கு மினிமம் சார்ஜ் என 40 ரூபாய் பயன்படுத்தினாலும், பயன்படுத்தாவிட்டாலும் செலுத்தினோம்.

★ பயன்படுத்தினால் மினிமம் கட்டணத்தில் கழித்து கொள்ளலாம் என உத்தரவு போடப்பட்டு 31.03.2012 வரை நடைமுறையில் இருந்தது. அதன்பிறகு 01.04.2012 முதல் 5.50 பைசா யூனிட் கட்டணமும் Fixed Charge ரூ. 30 KW ஒன்றுக்கு என முதல் முதலில் திரும்ப பெற இயலாத கட்டணத்தை நூதனமாக அறிவித்த போது நுகர்வோர்கள் ஆகிய நாம் எதிர்ப்பை பதிவு செய்யத் தவறினோம்.

★ பிறகு 11.08.2017ல் யூனிட் கட்டணம் 6.35 பைசா ஆகவும், Fixed charge ரூ. 30 லிருந்து 35 ஆக உயர்த்தப்பட்டது.

★ அதைத் தொடர்ந்து 2022ல் ரூ. 35 லிருந்து 430% உயர்த்தி ரூ. 150ஆக செலுத்த உத்தரவு போட்டும், 2023ல் பத்தே மாதத்தில் ரூ. 153 என உயர்த்தி தொழிலே செய்ய இயலாத நிலை ஏற்பட்டு உள்ளது.

★ அதேபோல வருடம் ஒரு முறை அதிகபட்சம் 6% வரை உயர்த்திக் கொள்ளலாம் என ஒழுங்குமுறை ஆணையம் அனுமதி வழங்கியுள்ளது. குறைந்தது 2% முதல் 6% உயர்வு எனில் ரூ. 3 முதல் ரூ. 9 வரை KW ஒன்றுக்கு உயரும்.

நண்பர்களே நமது உரிமைகளை தாமதம் இன்றி கேட்டு பெற கடமை தவறும்போது, அதன் சுமையை நாம் சுமக்க நேரிடுகின்றது. தமிழ்நாடு தொழில்துறை மின் நுகர்வோர்கள் கூட்டமைப்பு நமது உரிமைகளை மீட்டு எடுக்க தொடர் போராட்டங்களை செய்து 50% மீட்டு சுமையை குறைத்து உள்ளோம்.

நமது கோரிக்கைகளை அரசிடம் வலியுறுத்தி வாழ்வாதாரத்தை பாதுகாப்போம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது. – வாட்ஸ்ஆப்-லிருந்து


ஸ்ரீ முருகன் துணை
K.S. மோகன்லால்


98430 72626
98425 72626
ஹரிலால்
பில்டிங் மெட்டீரியல்ஸ் சப்ளையர்ஸ்
குறிப்பிட்ட நேரத்தில் டெலிவரி செய்யப்படும்
* செங்கல்
* மணல்
* ஜல்லி (1 1/2", 3/4", 1/2")
* கிராவல்
* கிரஷர் தூசி
* சங்கர் டால்மியா சிமெண்ட் மூடை
* உடைகல்
No: 125, ஞானவேல் காலனி, கீரைத்தோட்டம் ரோடு, (மல்லிகை தெரு), தெப்பக்குளம், மதுரை – 9

# முதலீட்டாளர்கள் உலகம்

ஸ்டார்ட்அப் நிறுவனச் செயல்பாட்டில் நிதி திரட்டுதல் என்பது மிக முக்கியமான அங்கம். நல்ல ஐடியாவை நிறுவனமாக மாற்றிய பிறகு, நிறுவனத்தை விரிவுபடுத்த நிதி தேவை. இத்தகைய சூழலில் ஏஞ்சல் இன்வெஸ்டார், வென்சர் கேபிடல் உள்ளிட்ட வாய்ப்புகளைப் பயனபடுத்தி ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் நிதி திரட்டுவது வழக்கம். அந்தவகையில் முதலீட்டாளர்கள் ஸ்டார்ட்அப் நிறுவன வளர்ச்சியில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

ஆனால், பொதுத் தளத்தில், ஸ்டார்ட்அப் தொழில்முனைவு செயல்பாடு குறித்து தெரிந்த அளவுக்கு, முதலீட்டாளர்களின் உலகம் பற்றி பரவலாக தெரிவதில்லை. முதலீட்டாளர்கள் என்பவர் யார், ஏன் அவர் ஸ்டார்ட் அப் நிறுவனங்களுக்கு நிதி வழங்குகிறார், ஸ்டார்ட்அப் நிறுவனங்களிடமிருந்து அவர் எதிர்பார்க்கும் தகுதிகள் என்ன என்பனவற்றை தெரிந்துகொள்வது அவசியம்.

ஆரம்ப நிலையில் இருக்கும் தொழில்முனைவோருக்கு நிதியும், வழிகாட்டுதலும் வழங்கி உதவும் முதலீட்டாளர்கள் ஏஞ்சல் இன்வெஸ்டார்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இந்த முதலீட்டாளர்களின் உலகம் எப்படிப்பட்டது, அவர்கள் எப்படி விஷயங்களை அணுகுகிறார்கள் என்பன குறித்து பார்ப்போம்...

சாதாரண மக்கள் தங்கள் பணத்தைப் பெருக்க நிலம், தங்கம், வங்கி மற்றும் பரஸ்பர நிதி திட்டங்களில் முதலீடு செய்வது வழக்கம். அடுத்த கட்டமாக, பங்குச் சந்தையில் முதலீடு செய்வார்கள். இதுவே, ஹைச்என்ஐ (HNI) என்று அழைக்கப்படும் அதிக சொத்து மதிப்பு கொண்ட தனி நபர்கள் தங்கள் வசமுள்ள பணத்தைப் பெருக்க வெவ்வேறு வழிகளில் முதலீடு செய்வார்கள். ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் முதலீடு செய்வது அவற்றில் ஒன்று. இன்று அதிக ஸ்டார்ட்அப் நிறுவனங்களைக் கொண்டிருக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா 3வது இடத்தில் இருக்கிறது. இந்தியப் பொருளாதாரத்தை முன்னகர்த்திச் செல்லக்கூடியதாக ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உள்ளன.

ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் முதலீடு செய்தால், 40 சதவீதம் வரையில் ரிட்டர்ன் கிடைக்கும். இதனால், அதிக சொத்து மதிப்பு கொண்ட ஏஞ்சல் இன்வெஸ்டார்களுக்கான சிறந்த முதலீட்டு வாய்ப்பாக ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் உள்ளன. சொல்லப்போனால், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள் எப்படி நல்ல முதலீட்டாளர்களை தேடிக்கொண்டிருக்கிறார்களோ, அதுபோலவே முதலீட்டாளர்கள் நல்ல ஸ்டார்ட்அப் நிறுவனங்களைத் தேடிக்கொண்டிருக்கின்றனர்.

முதலீட்டாளர்கள் ஒரு நிறுவனத்துக்கு நிதி வழங்குவதற்கு அந்நிறுவனத்திடம் இருந்து எதிர்பார்க்கும் தகுதிகள்:

நாம் குதிரை மீது அல்ல, அதை இயக்கும் வீரர் மீதுதான் பந்தயம் கட்டுகிறோம். அதுபோலத்தான் ஸ்டார்ட்அப் மீதான முதலீடும். முதலீட்டாளர்களாகிய நாங்கள், நிறுவனர்களின் திறனையும் ஆற்றலையும் மிகத் தீவிரமாக மதிப்பீடு செய்வார்கள். அவர்களிடம் எந்த அளவுக்கு ஆற்றல் இருக்கிறது என்பதை அலசுவார்கள். பொதுவாக, தனி நிறுவனராக இல்லாமல், இணை நிறுவனர்கள் இருந்தால் நல்லது. அப்போது தான், நிறுவனத்தில் சமநிலை நிலவும்.

முதலீடு என்பது ஒரு நீண்டகால உறவு. எனவே, முதலீட்டாளர்களை ஈர்க்கும் வகையில், நிறுவனர்கள் தங்கள் ஸ்டார்ட்அப் நிறுவனத்தின் ஐடியாவை மிகத் தெளிவாக முன்வைக்க வேண்டும். உங்கள் நிறுவனத்துக்கான சந்தை வாய்ப்பு எப்படி இருக்கிறது, போட்டிச் சூழல் என்ன, நிறுவனத்தை முன்னெடுத்து செல்வதற்கான அடுத்த கட்ட திட்டங்கள் என்ன என்பனவற்றை மிகத் தெளிவாகவும், ஆழமாகவும் முன்வைக்கத் தெரிய வேண்டும்.

நிதி திரட்டலில் ஈடுபடும் ஸ்டார்ட்அப் நிறுவனர்கள் சில விஷயங்களை மனதில் கொள்ள வேண்டும். வெற்றி என்பது ஐடியாவில் இல்லை. அதை எப்படி செயல்படுத்துகிறீர்கள் என்பதில் தான் இருக்கிறது. எனவே, ஐடியாவை எப்படி செயலாக மாற்றப்போகிறீர்கள் என்பதில் கூடுதல் கவனம் செலுத்துவது அவசியம்.

நிதி கிடைக்கவில்லை என்றால் மனம் தளர்ந்துவிடாதீர்கள். உங்களை நோக்கி கேட்கப்படும் ஒவ்வொரு கேள்வியும் உங்களை ஒரு படி முன்னகர்த்திச் செல்கிறது என்று கருதுங்கள். கேள்விகளை கண்டு அஞ்சாதீர்கள். எதிர்கொள்ளுங்கள்.


நூற்றாண்டு கால பட்டு பாரம்பரியம்
SRB SILKS HOUSE
145,East Veli Street, Thavitusanthai, Madurai-1.
Cell : 92445 00633

SRB FINSERVE PVT.LTD.
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
(Opp: Aavin High Tech Parlour)
Cell : 90922 97702

SRB RETAIL LLC.
503, Gracelyn Way Lewis Center,
COLUMBUS, OHIO,43035.
Ph : +1 952 290 6405

SRB MULTI PURPOSE HALL
B1, Sivagangai Road, Managiri, K.K.Nagar, Madurai.
Cell : 89039 29247

EXPRESS BRIYANI
Anna Nagar, South Marret St., Kalavasal.
Cell : 97901 59015, 72007 26300

KEESHTU BOLI & SNACKS
East Gate - Kalavasal - Navabathkana Street, Madurai.
Cell : 81243 45000

SRB CATERING
135, 2nd East Main Road, Anna Nagar, Madurai.
Cell : 89398 97500

SWASI NATURO CURE HOSPITAL
ஆயுர்வேதம் – பஞ்சகர்மா – பாதகூஸா, வர்மா மருத்துவம்
S.R.B.Complex, 392, Anna Nagar, Madurai.
Cell : 95977 48952

S.R.B.KISHORILAL ★ S.R.B.MADANLAL
S.R.B.ARUNLAL

# மென்பொருள் துறைபற்றியும் - ஏஐ தொழில்நுட்பத்தின் தாக்கம் குறத்தும்

## சோஹோ நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி **ஸ்ரீதர் வேம்பு** அவர்களின் பதில்கள்

தென்காசி மாவட்டம் கடையத்திலிருந்து 6 கி.மீ., தொலைவில் இருக்கிறது கோவிந்தபேரி. மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் இருக்கும் ஒரு சிறு கிராமம். ஆண்டுக்கு ரூ. 8500 கோடி வருவாய் ஈட்டும், இந்தியாவின் முன்னுதாரண மென்பொருள் நிறுவனங்களில் ஒன்றான சோஹோவின் நிறுவனரும் அதன் தலைமை செயல் அதிகாரியுமான ஸ்ரீதர் வேம்பு இந்தக் கிராமத்தில்தான் வசிக்கிறார்.

ஸ்ரீதர் வேம்புவின் சொந்த ஊர் இதுவல்ல. அவர் பிறந்தது தஞ்சாவூர். வளர்ந்தது சென்னை. படித்தது, வேலை பார்த்தது அமெரிக்கா. 1996ம் ஆண்டு சோஹோ நிறுவனத்தை சென்னையில் தொடங்கியவர். மேற்குத் தொடர்ச்சி மலையின் ரம்மியத்தின்பால் ஈர்க்கப்பட்டு, 2011ல் தென்காசி மத்தளம்பாறையில் சோஹோவுக்கு பெரிய அளவில் அலுவலகம் ஒன்றை திறந்தார். தற்போது இங்கு 700 பேர் பணிபுரிகிறார்கள். சோஹோவுக்கு அமெரிக்கா, சீனா, ஜப்பான், இத்தாலி, ஸ்பெயின் என பல நாடுகளில் அலுவலகங்கள் உண்டு.

கிராமங்கள் பொருளாதார ரீதியாக தன்னிறைவு பெற வேண்டுமென்றால், அங்கு தொழில் செயல்பாடுகள் நிகழ வேண்டும்; அதற்கான கல்வி அப்பகுதி மக்களுக்கு கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையில் நிறுவனம் மட்டுமல்லாது, கோவிந்தபேரியில் கலைவாணி கல்வி மையம் என்ற பெயரில் ஒரு சிறு பள்ளியையும் நடத்தி வருகிறார் வேம்பு.

நாளிதழ் ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியின் சில முக்கிய கேள்வி பதில்களை மட்டும் காண்போம்.

**மென்பொருள் துறைக்கும் மற்ற துறைக்கும் ஏன் இவ்வளவு ஊதிய ஏற்றத்தாழ்வு?**

மென்பொருள் துறை அளவுக்கு ஏனைய துறைகளில் ஊதியம் கிடைப்பதில்லை. 2000-ம் ஆண்டுக்குப் பிறகு, மென்பொருள் துறைக்கு சர்வதேச அளவில் மிகப்பெரும் சந்தை வாய்ப்பு உருவானது. இதனால், முதலீட்டாளர்கள் இத்துறையின் கோடிகோடியாக முதலீடு செய்ய ஆரம்பித்தார்கள். இதனால் இத்துறை மிகப் பெரும் வளர்ச்சியை எட்டியது. ஆனால், தற்போது மென்பொருள் துறைக்கு முதலீடுகள் வருவது குறைய ஆரம்பித்து இருக்கிறது. அந்த முதலீடு மற்ற துறைகளுக்கு திரும்பத் தொடங்கி உள்ளது. முதலீட்டாளர்கள் உற்பத்தி, விவசாயம் உட்பட ஏனைய துறைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்து இருக்கின்றனர். இதனால், தற்போது சூழல் மாறி வருகிறது. சமீபத்தில் கோவை சென்றிருந்தபோது பார்த்தேன், வெவ்வேறு துறைகள் சார்ந்து சின்னச் சின்னதாக நிறைய புதிய நிறுவனங்கள் உருவாகி இருந்தன. இந்த மாற்றம் வரும் காலங்களில் பரவலாகும். அப்போது ஊதிய ஏற்றத்தாழ்வு ஓரளவுக்கு மட்டுப்படும்.....

**செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம்(ஏஐ) தாக்கம் எப்படிப்பட்டதாக இருக்கும்?**

உண்மையில் ஏஐ என்ன விளைவுகளை ஏற்படுத்தும், அது எப்படிப்பட்டதாக இருக்கும் என்பது குறித்து இன்னும் போதிய தெளிவு உருவாகவில்லை. ஆனால், ஒன்று மட்டும் நிச்சயம். மனிதகுலத்தில் மிகப்பெரும் பாய்ச்சலை ஏஐ நிகழ்த்த உள்ளது. ஏஐ மூலம் நிறைய புதிய மாற்றங்கள் உருவாகும். உற்பத்தி பெருகும். இதனால் மக்களின் வாழ்க்கைத் தரம் மேம்படும். நிறைய புதிய வேலைவாய்ப்புகளும் உருவாகும்.

அதேசமயம் ஏஐ முறையாக கையாளப்படாவிட்டால் அது பெரும் அழிவுகளை ஏற்படுத்தவும் வாய்ப்புள்ளது. அதில் மிக அடிப்படையானது செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தால் கோடிக்கணக்கான பேர் வேலை இழக்கும் அபாயம் உள்ளது. அதற்கான மாற்று குறித்து நாம் சிந்திக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம். ஏஐ என்பது தவிர்க்க முடியாதது. அது நிகழ்ந்தே தீரும். அதை நாம் எப்படிப் பயன்படுத்திக் கொள்ளப்போகிறோம் என்பதில்தான் அதன் முக்கியத்துவம் உள்ளது.

அணு ஆயுதங்களை பயன்படுத்தக் கூடாது என்று உலக நாடுகளிடையே புரிந்துணர்வு இருக்கிறது. குளோனிங் தொழில்நுட்பம் மீதும் கட்டுப்பாடுகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. அத்தகைய ஒரு புரிந்துணர்வை ஏஐ சார்ந்து உலக நாடுகள் மேற்கொள்ள வேண்டியது அவசியம். மிகக் குறிப்பாக, ஏஐ சார்ந்து குறிப்பிட்ட ஒரு சில நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தும் சூழல் உருவாகக் கூடாது. அப்படி உருவானால் அது மிகப்பெரிய ஆபத்தை ஏற்படுத்தும். இந்தியா இதில் மிகுந்த கவனமுடன் இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட சில நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்தும் போக்குக்கு மாற்றான கட்டமைப்பை உருவாக்குவதில் இந்தியா முன்னுதாரண நாடாக உள்ளது. மிகச் சிறந்த உதாரணம் யுபிஐ. அடுத்ததாக ஒஎன்டிசி. இ-காமர்ஸ் துறையில் ஒரு சில பெரிய நிறுவனங்கள் ஆதிக்கம் செலுத்திவந்த நிலையில், அதை ஜனநாயகப்படுத்தும் வகையில் ஒஎன்டிசி கட்டமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஏஐ சார்ந்தும் இந்த ஜனநாயகப்படுத்தல் நிகழ வேண்டும். இவ்வாறு கூறினார்.



# அலுவலகத்தில் சிறப்பாக பணிபுரிய வேண்டுமா?

தொழில்நுட்ப வளர்ச்சியால் மின்னணு சாதனங்களின் பயன்பாடு மக்களிடையே பெருமளவில் அதிகரித்துவிட்டது. அந்தவகையில் வீட்டின் அத்தியாவசியத் தேவைகள் பட்டியலில் குளிர்சாதனப்பெட்டி (ஃபிரிட்ஜ்), சலவை இயந்திரம் (வாஷிங் மெஷின்), குளிரூட்டி(ஏசி) என மின் சாதனங்கள் பல்கிப் பெருகிவிட்டன. படித்தவர்கள், அலுவலகத்தில் வேலை பார்ப்பவர்கள் என்று பெரும்பாலானோர் இன்று ஏசி வாழ்க்கைக்கு பழகிவிட்டனர். ஏசி இல்லாமல் இருக்க முடியாது என்ற நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டனர். பலருக்கும் இதற்கு அடித்தளமிட்டது அலுவலகம் என்று கூட சொல்லலாம். மேலும், பெரு நகரங்களில் வசிப்பவர்கள் தட்பவெப்பநிலை, சுற்றுப்புறச்சூழல் காரணமாக ஏசி-யைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயத்திற்கும் ஆளாகியுள்ளனர். ஏன், கிராமங்களில் கூட நவீன மின்னணு சாதனங்கள் புகுத்தப்பட்டு வருகின்றன.

மின்னணு சாதனங்களினால் ஏற்படும் பாதிப்புகள் ஒருபுறம் இருந்தாலும் அவை மக்களின் பயன்பாட்டில் தவிர்க்க முடியாத ஒன்றாகிவிட்டது. இந்நிலையில் மின்னணு சாதனங்களில் ஒன்றான ஏசி-க்கும் ஒருவருடைய வேலையின் செயல்திறனுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாக ஆய்வொன்றில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

உதாரணமாக அலுவலகத்தில் நீங்கள் பணிபுரியும் அறையில் வெப்பநிலை அதிகமாகவோ அல்லது மிகவும் குறைவாக இருந்தால் ஒருவித அசௌகரியத்தை உணரலாம். அதிகமாக இருந்தால் மூச்சுவிடுவதில் சிரமமும், குறைவாக இருந்தால் குளிரினால் அசௌகரியமாக இருக்கும். குளிரைத் தாங்க முடியாதவர்களுக்கு மிகவும் சிரமமாக இருக்கும். இது உங்களுடைய உடல்நிலையை மட்டுமின்றி வேலைத்திறனைப் பாதிக்கும் என்று உறுதி செய்துள்ளனர் நிபுணர்கள்.

ஏசி வெப்பநிலை காரணமாக சராசரியாக 10-30 நிமிடங்களுக்கு ஒருமுறை கவனச்சிதறல் ஏற்படுவதாகவும் திறமையாக வேலை செய்ய முடியவில்லை என்றும் ஆய்வில் தெரியவந்துள்ளது. ஏசி வெப்பநிலையில், உங்களுடைய உடல்நிலைக்கு தகாதவாறு ஒரு சில டிகிரி வித்தியாசம் இருந்தால்கூட வேலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் இது உளவியல் தொடர்பானது என்றும் உளவியலாளர் சாலிஹா அப்ரிடி தெரிவிக்கிறார்.

### எது சிறந்த வெப்பநிலை?

24 டிகிரி செல்சியஸ் என்பது மனிதனின் உடல் வெப்பநிலைக்கு ஏற்றவாறு இருக்கும். மேலும் சிறந்த செயல்திறனை தரக்கூடியது. 22 டிகிரி செல்சியஸ் சற்று குளிரான வெப்பநிலை. ஆனால், இது ஆண்களுக்கும் குழந்தைகளுக்கும் சிறந்த செயல்திறனை அளிக்கும். பெண்கள் 26 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் சுறுசுறுப்பாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

21 டிகிரி செல்சியஸை ஒப்பிடுகையில், 26 அல்லது அதற்கு மேற்பட்ட வெப்பநிலையில் பெண்களின் செயல்திறன் 27% அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது. படுக்கைக்கு செல்லும்போது உடலின் உள் வெப்பநிலை குறைவதால் 20 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் தூங்குவது சிறந்தது. உடற்பயிற்சி செய்வதற்கான வெப்பநிலை, 20-21 டிகிரி செல்சியஸ் ஆக இருந்தால் பயனுள்ளதாக இருக்கும் என்று டியூக் பல்கலைக்கழக மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

மேலும், தற்போது பலரும் வீட்டில் இருந்து வேலை செய்து வருகின்றனர். அலுவலகத்தில் சக ஊழியர்களையும் மனதில் கொண்டு ஏசி வெப்பநிலையை வைக்க வேண்டும். ஆனால், உங்கள் அறையில் உங்களுடைய உடல்நிலைக்கு ஏற்றவாறு வெப்பநிலையை அறிந்து வைத்துக்கொள்ளுங்கள். இது உங்கள் வேலையின் செயல்திறனை அதிகரிக்கும். - தினமணி




கடந்த 2023 டிசம்பர் மாத லாப் ஸமாச்சார் இதழ், ரோபோட்டிக்ஸ் சர்ஜிரி முறையில் சாதனை புரிந்த நம் சமூகத்தின் இளம் மருத்துவர், யுவா யூராலஜிஸ்ட் கிளினிக் டாக்டர். ஆர்.எம். சதீஷ் குமார் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது. இவர் நமது சேம்பர்-ன் உறுப்பினரும் ஆவார். லாப் ஸமாச்சார் இதழ் மற்றும் அதில் வரும் தகவல்களைப் பாராட்டிப் பேசினார். மேலும் சேம்பர்-ல் உறுப்பினராக தொடர்வது பெருமையாக உள்ளது என்று தெரிவித்தார்.

புகைப்படத்தில் இடமிருந்து வலம்: திரு. டி.கே. யாகேஸ்வரன், இதழ் ஆசிரியர் திரு. எஸ்.எம். கார்த்தி குமரன், திரு. ஆர்.எம். சதீஷ் குமார், PR திரு. டி.என். சூரியபிரகாஷ், திரு. கே.பி. சிவப்பிரகாஷ் பாபு



ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST

OM SHANTI

Cell: 90805 54802, 99424 90217

**Prof. Dr. M.V. SUBBURAMAN**

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga), M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University (Retd. HOD of Hindi, The American College, Madurai).

MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

# பேக்கேஜிங் முறையில் புதிய மாற்றம்

**புதிய நடைமுறையை இந்த மாதம் ஜனவரி 1 முதல் அமல்படுத்தியுள்ளது மத்திய அரசு**

ஒரு கிலோவிற்கு அதிகமான எடை கொண்ட பாக்கெட் செய்யப்பட்ட பொருட்களை உற்பத்தி செய்யும் மற்றும் இறக்குமதி செய்யும் நிறுவனங்கள், அதிகபட்ச சில்லறை விலையுடன் ஒரு கிலோவிற்கு யூனிட் விற்பனை விலை என்ன என்பதை அச்சிட வேண்டும். அதே போல ஒரு லிட்டருக்கு மேல் அளவு கொண்ட பொருட்களை உற்பத்திய செய்யும்போது அதற்கு அதிக பட்ச சில்லறை விலையுடன் ஒரு லிட்டருக்கு யூனிட் விற்பனை விலை என்ன என்பதையும் குறிப்பிட வேண்டும்.

உதாரணமாக 5 கிலோ பாக்கெட் கோதுமை மாவு பாக்கெட்டில் மொத்த விலையுடன், ஒரு கிலோவின் விற்பனை விலையும் இடம்பெற வேண்டும்.

அதேபோல் ஒரு கிலோவிற்கும் குறைவான பாக்கெட் செய்யபட்ட உணவு பொருளுக்கு, ஒரு கிராம் விற்பனை விலையும் இடம்பெற வேண்டும். ஒரு லிட்டருக்கும் குறைவான பாக்கெட் செய்யப்பட்ட பொருளுக்கு ஒரு மில்லி லிட்டர் விலையையும் குறிப்பிட வேண்டும். ஒரு மீட்டருக்கு மேல் அளவு கொண்ட பொருளுக்கு ஒரு மீட்டருக்கான விலையையும், ஒரு மீட்டருக்கு குறைவான அளவு கொண்ட பொருளுக்கு ஒரு செ.மீ. விலையையும் குறிப்பிட வேண்டும். பேனா மற்றும் பென்சில்களில் ஒன்றுக்கும் மேற்பட்ட எண்ணிக்கையை கொண்ட பாக்கெட்டுகளில் ஒரு பென்சில் அல்லது பேனாவின் யூனிட் விலையை குறிப்பிட வேண்டும்.

இந்த புதிய நடைமுறையை மத்திய அரசு இந்த மாதம் ஜனவரி 1 முதல் அமல்படுத்தியுள்ளது.

இது குறித்து அதிகாரி ஒருவர் கூறியதாவது, இந்த புதிய நடைமுறையால் பொருட்களை வாங்குபவர்கள் சரியான முறையில் தேர்ந்தெடுத்து பொருட்களை வாங்க முடியும். இந்த விதிமுறைகளை மீறும் நிறுவனங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அபராதம் விதிக்கப்படும்.

பால், டீ, பிஸ்கட், சமையல் எண்ணை, கோதுமை மாவு, குளிர்பானம், குடிநீர், குழந்தைகளுக்கான உணவு, பருப்பு வகைகள், தானியங்கள், சிமெண்ட் பை, பிரட் உள்ளிட்ட 19 வகையான பொருட்களை பேக்கேஜிங் செய்வதற்கான குறிப்பிட்ட அளவு என்ற விதிமுறைகளும் நீக்கப்பட்டு உள்ளது.

இதன் மூலம் உற்பத்தியாளர்கள் சந்தையில் விற்கும் அனைத்து பாக்கெட் செய்யப்பட்ட பொருட்களின் அளவை தீர்மானிக்க முழு சுதந்திரம் உள்ளது. அனைத்து அளவுகளிலும் பாக்கெட் செய்யப்பட்ட பொருட்கள் கிடைப்பதால் நுகர்வோர் தங்களுக்கு தேவையானதை தேர்வு செய்து வாங்கலாம். இவ்வாறு கூறினார்.

## உணவுப் பொருட்களை அடைத்து விற்க தடை நீக்கம்

பால், எண்ணெய், பால் பொருட்கள், பிஸ்கட்டுகளை பிளாஸ்டிக் கவர்களில் அடைத்து விற்க விதிவிலக்கு அளித்ததை வாபஸ் பெற்று பிறப்பித்த உத்தரவை சென்னை உயர் நீதிமன்றம் நிறுத்திவைத்துள்ளது.

ஒரு முறை பயன்படுத்தும் 14 வகையான பிளாஸ்டிக் பொருட்களுக்கு அரசு விதித்த தடையை எதிர்த்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் சங்கம் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தது.

இந்த தடை உத்தரவு செல்லும் என உயர் நீதி மன்ற நீதிபதிகள் எஸ். வைத்தியநாதன், பி.டி. ஆஷா அமர்வு உத்தரவிட்டது. இதை மறு ஆய்வு செய்யக் கோரி, பிளாஸ்டிக் உற்பத்தியாளர் சங்கம், மனு தாக்கல் செய்யதது. மனுவை, நீதிபதிகள் எஸ். வைத்தியநாதன், பி.டி. ஆஷா அடங்கிய அமர்வு விசாரித்தது.

சிறு,குறு மற்றும் நடுத்தர தொழில் துறை செயலர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் பால், பால் பொருட்கள், எண்ணெய், பிஸ்கட், மருந்து பொருட்களை பிளாஸ்டிக் கவரில் அடைத்து விற்பதால் 2020ல் பிறப்பித்த உத்தரவை அமல்படுத்துவது சாத்தியமில்லை. அதனால் தடை உத்தரவை மாற்ற, அனுமதி அளிக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது.

பிளாஸ்டிக் தயாரிப்பாளர் சங்கம் சார்பில், வழக்கறிஞர் நர்மதா சம்பத் ஆஜராகி தினசரி பயன்படுத்தும் பொருட்களை பிளாஸ்டிக் உறையில் அடைத்து விற்பதை தடுப்பது சாத்தியமில்லை. அதனால், ஏற்கனவே அளித்த விதிவிலக்கை தொடர அனுமதிக்க வேண்டும் என்றார். இதையடுத்து, அன்றாட உணவுப் பொருட்களை பிளாஸ்டிக் கவர்களில் அடைத்து விற்பனை செய்ய விதிவிலக்கு அளித்த உத்தரவை வாபஸ் பெற்று பிறப்பித்த உத்தரவை, நீதிபதிகள் நிறுத்தி வைத்தனர்.

இதனால், அன்றாட உணவுப் பொருட்களை பிளாஸ்டிக் கவர்களில் அடைத்து விற்க, தடை நீங்கியுள்ளது.




# GST - E-way Bill Circular

சமீப காலங்களில் அதிகாரிகளால் சரக்கு வாகனங்கள் நிறுத்தப்பட்டு அதிகப்படியான தண்டங்கள் வசூலிக்கப்படுகின்றன. வாகனங்களில் கொண்டு செல்லப்படும் பொருட்களுக்கு அதன் இலாபத்தை விட பல மடங்கு தண்டத் தொகையாக வணிகர்கள் கட்டி வருகின்றனர்.

சரக்கு வாகனங்கள் செல்லும் செல்லும்போது கண்டிப்பாக விற்பனை பில் அல்லது Delivery note கண்டிப்பாக இருக்க வேண்டும். அதன் மதிப்பு ரூ. 1,00,000க்கு மேல் இருப்பின் (within the state) ரூ. 50,000க்கு மேல் இருப்பின் (other state sale) E-way bill கண்டிப்பாக இருக்க வேண்டும்.

சமீபத்தில் அதாவது 24.11.2023 Commissioner of Commercial taxes, Chennai அவர்களால் ஒரு சுற்றறிகை அனுப்பப்பட்டது.

அந்த சுற்றறிக்கையில் Roving Squad அதிகாரிகளால் வாகனத் தணிக்கை செய்யும் பொழுது ஒரு Bill-ன் சரக்குகளின் மதிப்பு ரூ. 1,00,000 குறைவாக இருந்தாலும் E-way Bill இல்லை என்ற காரணத்தினால் தண்டத்தொகை வசூலிக்கப்படுகிறது என்றும் அது முற்றிலும் தவறு என்றும், அந்த காரணத்திற்காக சரக்கு வாகனங்கள் நிறுத்தப்பட்டால், அந்த அதிகாரிகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

மேலும் வாகனத் தணிக்கையின் போது Physical verification அதாவது சரக்கு வாகனத்தில் உள்ள சரக்குகளின் எடை எவ்வளவு என்பதை கணக்கிட அருகிலுள்ள Approved weighmen Bridge-ல் தான் எடை கணக்கிட வேண்டும். வணிகரிடத்திலோ அல்லது வேறு எங்காவது எடை கணக்கிடக் கூடாது என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

Circular no. 9 (தமிழ்நாட்டிற்குள் கீழ்கண்ட சரக்குகளை சரக்கு வாகனங்களில் அனுப்பும் போது E-way Bill தேவையில்லை)

இந்தியா முழுவதும் 2018-19ம் ஆண்டு முதல் இ-வே பில் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன்படி ஒரு மாநிலம் விட்டு ஒரு மாநிலம் செல்லும்போது சரக்குகளின் Consignment value ரூ. 50,000க்கு மேல் இருப்பின் E-way Bill கண்டிப்பாக எடுக்க வேண்டும் என்றும், Non motorissed vehicle அதாவது கைவண்டி motor பொருத்தப்படாத tricycle-ல் கொண்டு செல்லப்படும் பொருட்களுக்கு E-way Bill தேவையில்லை என்றும், LPG Gas Supply to customer, Ration கடையில் விற்கப்படும் Kerosine, Postal Department மூலமாக அனுப்பப்படும் package மற்றும் ரூபாய் நோட்டுகள் கொண்டு செல்லும் வாகனங்களுக்கு E-way Bill தேவையில்லை என்று சட்டம் இயற்றப்பட்டது.

மாநிலங்களுக்குள்ளே சரக்குகளை கொண்டு செல்லும் பொழுது எந்தெந்த சரக்குகளுக்கு E-way Bill தேவை மற்றும் E-way Bill எடுப்பதற்கான வரம்புத்தொகை நிர்ணயிப்பதை அந்தந்த மாநிலங்களே முடிவு செய்து கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

அதன்படி ஒவ்வொரு மாநிலமும் within the state-ல் அனுப்பப்படும் E-way Bill நிர்ணயத் தொகை தனித்தனியாக நிர்ணயித்தும், E-way Bill அளிக்கப்படும் பொருட்களையும், ஒவ்வொரு மாநிலமும் அந்தந்த State GST Act- ல் Notification மூலம் அறிவிப்புகள் வெளியிடப்பட்டன.

தமிழ்நாட்டில் தமிழ்நாடு GST சட்டத்தில் (SGST Act) உள் மாழலத்தில் (within the state) கொண்டு செல்லப்படும் சரக்குகளின் மதிப்பு ரூ. 1,00,000க்கு மேல் இருந்தால் தான் E-way Bill எடுக்க வேண்டும் என்றும், சுமார் நூறு வகையான பொருட்களுக்கு E-way Bill எடுப்பதில் விலக்கு அளிக்கப்படும் வகையில் Notification no.9/dt. 31.05.2018 அறிவிப்பு வெளியாயிற்று.

மேலும் E-way Bill நடைமுறைச் சட்டத்தில் அதாவது சட்டப்பிரிவு 138ன்படி E-way Bill எடுக்க வேண்டிய வரம்புத் தொகை Consignment value என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த Consignment value என்பது என்னவெனில் (ஒரு Bill-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகையே ஆகும்).

உதாரணமாக A என்ற ஒரு வணிகர் B என்ற வணிகருக்கு வரியுள்ள பொருட்களை (E-way Bill விலக்கு இல்லாத பொருட்கள்) ஐந்து விற்பனை பில் மூலமாக விற்பனை செய்கிறார் என்றும் ஒவ்வொரு பில்-ன் மதிப்பும் ரூ. 80,000 என்றும், ஐந்து விற்பனை பில்-களின் மூலமாக (5×80,000) ரூ. 4,00,000 மதிப்புள்ள பொருட்களை ஒரே சரக்கு வாகனத்தில் ஒரே தேதியில் கொண்டு சென்றால் அதற்கு E-way Bill தேவையில்லை. ஒவ்வொரு பில்-ன் மதிப்பும் ரூ. 80,000 என்று இருப்பதால் (Consignment Value Per Bill) E-Way Bill விலக்கில் இருக்கிறது.

கூட்டுத்தொகை ரூ. 4,00,000 இருக்கிறது என்று கணக்கிடப்பட்டு E-way Bill இல்லை என அதிகாரிகளால் தண்டம் விதிக்கக்கூடாது என்றும் அந்த விற்பனை பில்-ன் நகலை எடுத்து பிற்பாடு verify செய்து கொள்ளலாம் என்று தண்டனை விதிக்காமல் சரக்கு வாகனங்களை அனுப்பிவிட வேண்டும் என்று வணிகரித்துறை ஆணையர், சென்னை அவர்களால் Circular no. 22/2019 dated 12.11.2019-ன்படி அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் மத்திய அரசால் Circular no. 64 சுற்றறிகை 14.09.2018 தேதிப்படி இ-வே பில் எடுப்பதில் கீழ்காணும் குறைகள் இருந்தால் அவற்றிற்கு தண்டத் தொகையாக ரூ. 500 மட்டுமே வசூலிக்கப்பட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

- Spelling Mistakes of the Consigner or consignee but correct GSTIN.
- Error in Pincode
- Error in Address.
- Error in (1 or 2 Digits) in the document number (Bill or Delivery note).
- Error in HSN code (But first 2 digit of HSN code must be correct).
- Error in 1 or 2 digit / corrector of the vehicle number.

- தமிழ்நாடு உணவுப்பொருள் வாணிபம்

PANDIAN
PERFORMANCE CHEMICALS

# PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

57\62,(N.P) 3rd Street, SIDCO Industrial Estate, Ambattur Industrial Estate, Pattravakkam, Chennai-600 098

Home Care ▸ Fabric Care ▸ Personal Care ▸ Skin Care




PANDIAN SURFACTANTS PRIVATE LIMITED

- ALPHA OLEPHIN SULPHONATES
- SODIUM LAURYL ETHER SULPHATES
- SODIUM LAURYL SULPHATES
- CETOSTEARYL ALCOHOLS
- FATTY ALCOHOLS
- OLEO CHEMICALS
- POLYMERS
- PERFORMANCE CHEMICALS &
- FRAGRANCES

Dealers in

Godrej
Godrej Industries Limited

IFF
International Flavours & Fragrace Pvt. Ltd.



K K Dinakaran

www.pandiansurfactants.com /
www.pandianfragrances.com

Ph : + 91 44 2642 6202 / 2661 4405 | Cell : 9940960833, 9840960831

# கணினி பயன்படுத்துவோருக்கு கண்களைப் பாதுகாக்கும் 6 எளிய பயிற்சிகள்

முந்தைய காலத்தில் 50களுக்கு மேற்பட்ட வயதினரும், ஸ்டைலுக்காகவும் கண்ணாடி அணிவார்கள். ஆனால், நவீன தொழில்நுட்ப வளர்ச்சியாலும், மாறிவரும் உணவுப் பழக்க வழக்கத்தாலும் இன்றைய காலகட்டத்தில் குழந்தைகள் கூட கண் பார்வைக்காக கண்ணாடி அணியும் சூழல் வந்துவிட்டது.

கண் பார்வைக்கு ஆரோக்கியமான உணவு மிகமிக அவசியம். துரித, பொருந்தா உணவுகளைத் தவிர்த்து கண் பார்வையை மேம்படுத்தக்கூடிய வைட்டமின் ஏ அடங்கிய உணவுகளை குழந்தைகளுக்கு கொடுக்க வேண்டும்.

அதே போன்று கணினியைத் தொடர்ந்து பயன்படுத்துவோர் பலரும் இன்று கண் எரிச்சல், கண் பார்வை குறைவு உள்ளிட்ட பிரச்னைகளால் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அலுவலகத்தில் பல மணி நேரம் தொடர்ந்து கணினி பார்ப்பது, பின்னர் வீட்டிற்குச் சென்றும் மொபைல் போன் பயன்படுத்துவது கண் பிரச்சனைகளுக்கு எளிதில் வழிவகுக்கும்.

கணினி, மொபைல் போன் பயன்படுத்துவோர் சில எளிய பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் கண் பார்வை பிரச்னைகளைத் தடுக்கலாம்.

★ இரு உள்ளங்கைகளைக் கொண்டு நன்றாக தேய்த்து அதில் உருவாகும் சூட்டை உங்கள் கண்களில் மேல் வைக்கவும். கண்ணிற்கு லேசான சூடு சென்றவுடன் சில நொடிகளில் கண்களை மூடியிருந்து பின்னர் திறக்கவும்.

★ வேலை செய்யும் போது அதிக ஈடுபாட்டினால் பெரும்பாலானோர் கண்களை இமைப்பதில்லை. இது கண்களில் பெரும் பிரச்னையை ஏற்படுத்தும். எனவே கண்களை இமைக்க வேண்டிய நேரத்தில் இமைக்க வேண்டும்.

★ கருவிழியை மேலிருந்து கீழாக, இடமிருந்து வலமாக சுழற்ற வேண்டும். உங்கள் கண் இமைகளை மூடிவிட்டு, கண்களை வட்ட இயக்கங்களில் சுற்றவும். இது உங்கள் கண்களுக்கு மசாஜ் அளிப்பது போன்றது. கண்களைச் சுற்றி காணப்படும் தசைகளை புத்துணர்ச்சி பெற வைக்கிறது.

★ தூர இடைவெளியில் பொருள்களை பார்த்தல், அறையில் தூரத்தில் உள்ள பொருள் உங்களை நோக்கி வருவதாக நினைத்துக்கொள்ளுங்கள். அந்த பொருளை நோக்கி உங்கள் கண்கள் செல்லட்டும். அருகிலிருந்து தூரம் வரை கண்கள் செல்ல வேண்டும். இந்த நேரத்தில் கண்கள் நிலையான இயக்கத்தில் இருக்க வேண்டும்.

★ கணினி திரையைத் தாண்டி அறையில் உள்ள ஏதேனும் ஒரு பொருளை உற்றுநோக்க வேண்டும். இந்த உற்றுநோக்கும் பயிற்சி கண் பார்வைக்கு நல்ல பலனைத் தரும்.

★ ஒரு பொருள் ஜூம் ஆவது போல நினைத்துக்கொள்ளுங்கள். அதாவது ஒரு புள்ளியில் ஆரம்பித்து கண்கள் சுற்றிலும் விரிய வேண்டும்.

இது போன்ற பயிற்சிகளை மேற்கொள்வதன் மூலம் கண்களை பாதுகாக்கலாம். – தினமணி






பாரத தேசத்தின்

**குடியரசு தின விழா**

அழைப்பு

நாள்

26.01.2024, வெள்ளிக்கிழமை

நேரம்

காலை 8.30 மணி

இடம்

ஸௌராஷ்ட்ர சேம்பர் (புதிய அலுவலகம்) – ஆனந்த நிலையம் வளாக வாயில்





சிங்கப்பூர்
மலேசியா
6 நாட்கள்
All Inclusive
Rs.92,500
+5% GST
29-02-2024
இயற்கை எழில் மிகுந்த
8 நாட்கள்
பூடான்
Ladies Special
All Inclusive
Rs.65,800
+5% GST
06-03-2024
8 நாட்கள்
ஜப்பான்
Tradtional and Technology
All Inclusive
Rs.2,98,000
+5% GST
29-04-2024
பூமியின் சொர்க்கம்
6 நாட்கள்
காஷ்மீர்
All Inclusive
Rs.65,700
+5% GST
28-03-2024
www.vedhavalliholidays.com
99430 31237
VH
VEDHAVALLI
HOLIDAYS
வேதவல்லி ஹாலிடேஸ்
82, காமராஜர் சாலை, மதுரை

# கேள்வி - பதில் போட்டி

இந்த கேள்வி பதில் போட்டியில், சரியான விடையளிப்பவர்களுக்கு குலுக்கல் முறையில் முதல் மூன்று நபர்களுக்கு பரிசளிக்கப்படும். கீழ்காணும் கேள்விகளுக்கான தங்களின் பதிலை எழுதி புகைப்படம் எடுத்து, **93441 97952** என்ற எண்ணிற்கு வாட்ஸ்ஆப் செய்யவும். குலுக்கல் வென்றவருக்கு வீடு தேடி பரிசு வந்து சேரும்.

1. ஸௌராஷ்ட்ர சேம்பர் எத்தனாவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறது?

.................................................................................................................

2. உலக முதலீட்டார் மாநாடு – மதுரை மாவட்டத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட முதலீட்டு ஈர்ப்பு இலக்கு எவ்வளவு ரூ. ................................................

3. இன்று அதிக ஸ்டார்ட்அப் நிறுவனங்களைக் கொண்டிருக்கும் நாடுகளின் பட்டியலில் இந்தியா எத்தனாவது இடத்தில் இருக்கிறது..........................................................................

4. முதலீட்டாளர்கள், தற்போது எந்த துறைகளில் கவனம் செலுத்த ஆரம்பித்து இருக்கின்றனர்.........................................................................................................

5. பேக்கேஜிங் புதிய மாற்றம் – எப்போது முதல் மத்திய அரசு அமல்படுத்தியுள்ளது?

.................................................................................................................

பெயர் :.........................................................................................................

தொழில்:.......................................................................................................

தொலைபேசி எண்:...........................................................................................

முகவரி:........................................................................................................

.................................................................................................................

சேம்பர் உறுப்பினரா?: ஆம் / இல்லை ..................

## CONGRATULATIONS!!!...

| சென்ற மாத கேள்விக்கு சரியான விடை அளித்து குலுக்கல் முறையில் வெற்றி பெற்றவர்களுக்கு கிடைக்கும் பரிசுகள் | |
|---|---|
| | திரு. ஏ.எஸ். துர்கா<br>டெய்லரிங் / 88255 32156 |
| | திரு. பானு சுரேஷ்<br>..... / முனிச்சாலை / 90926 26487 |
| | திரு. ஜி.ஆர். சங்கர்லால்<br>ரியல் எஸ்டேட் / வள்ளுவர் காலனி / 98433 64894 |
| | திரு. எம்.ஆர். ஸ்ரீநிவாசன்<br>ராஷ்ட்ரா ஃபார்மா / அவனியாபுரம் / 97881 59070 |

அதிர்ஷ்டசாலிகள் நேரில் வந்து பரிசை பெற்றக்கொள்ளவும்


## திருக்குறள்

**வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்**
**வைத்தூறு போலக் கெடும்.**

**பொருள்:** (குற்றம் செய்தபின் வருந்திப் பயனில்லை. செய்து விடாமல் எச்சரிக்கையாகத் தடுக்க வேண்டும்) குற்றம் செய்வதற்கு முன் எச்சரிக்கையாக இருந்து விலக்கி விடாதவனுடைய வாழ்க்கை நெருப்புத் தீண்டுவதற்குமுன் தடுப்பாரில்லாத வைக்கோல் பொதிபோல் அழிந்தே போகும்.

அதிகாரம் 449 — குற்றங்கடித் (குற்றங்களை நீக்குவது) — அரசியல்

**ஸௌ. சேம்பர்** குறித்து கருத்து தெரிவிக்க **93441 97952**



Prop.: B.S. Rajan

• CCTV Camera • Long Distance Monitor • Security Alarm • Digital Video Recorder
• Voice Records • Access Control System • Firm Alarm • Audio & Video Door Phones

*Safety! Security!! Surveillance!!!*

**A TO Z CCTV SYSTEMS**
CCTV Camera Exclusive Showroom

Head Office :
No. 45, Kakkathoppu Street,
Town Hall Road, Madurai - 1.
Ph : 0452 - 4377609, 4522633 Cell : 98421 82633

Branch Office :
66, Kamarajar Street,
Opp. Keelavasal Bus Stop, Madurai - 9.
Cell : 73737 82633

Raj Tv / Vijay Tv / Vijay Super / Star Vijay / Vasanth Tv / Tms Award

www.bestnumerologist.com
sharvaraksanmrs@yahoo.co.in

தென் தமிழகத்தின் சிறந்த எண் கணித வித்தகர் / ஏகலை எண்கணிதன்
உலக அளவில் சௌராஷ்ட்ரா சமூகத்தில் முதல் எண் கணித ஜோதிடர்

**'ஷர்வ ரக்சன்' MRS**
Best Numerologist

Your Name is Your Life

பிறந்த குழந்தைகளுக்கு, உங்களுக்கு, உங்கள் வியாபார நிறுவனங்களுக்கு அழகான, அதிர்ஷ்டகரமான மற்றும் வஷியம் மிகுந்த பெயர் `எண் கணித ஜோதிட' முறைப்படி கணித்துக் கொடுக்கப்படும். திருமண பெயர் பொருத்தம் பார்த்துக் கொடுக்கப்படும்



**MANTHRALAYAM** 26, Packiyam Street, Anupanadi Theppakulam Main Road
Opp to Sourashtra Girls Higher Sec School, Madurai

For Appointment **98421 11411**



Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

**JSW COLOURON+ கூரைகள்**

**JSW Steel**

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்









## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

**Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in**

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

**Meerakunj**

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

*Trust us with all your Electrical, Plumbing and Agri needs...*





## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com



## உமா நகர்

அரசு அனுமதி பெற்ற வீட்டி மனைகள் விற்பனைக்கு

தொடர்புக்கு: திரு. S.A. உதயகுமார் நிறுவனர்

U K ஹோம்ஸ் & பிளாட்ஸ், மதுரை – 625012 +91 99659 81810

**வளர்ச்சி பெறும் திருமங்கலம்**

- மெட்ரோ ரயில் முதல்கட்ட பணிகள்ஆரம்பம்
- ரயில்வே மேம்பாலம் முதல்கட்ட பணிகள் ஆரம்பம்
- அமையவிருக்கும் எய்ம்ஸ் அருகிலுள்ள டவுன்ஷிப் திருமங்கலம்
- எங்கள் மனைப்பிரிவில் இருந்து 6கி.மீ., தொலைவில் கப்பலூர் ZOHO IT கம்பெனி அமைகிறது.
- மனைபிரிவிலிருந்து சிறிது தொலைவில் மெட்ரோ ரயில் ஸ்டேஷன் அமையும் வாய்ப்பு.

*நாளிதழ்களில் வரும் தகவல்கள் படி.

முகவரி: P.K.N. வித்யாலயா பள்ளி(CBSE) எதிர்புறம், வடகரை, திருமங்கலம் – 625 706. பஸ் ரூட்: 37B / பஸ் ஸ்டாப்: PKN கல்லூரி

எங்கள் லே–அவுட், திருமங்கலம் நகர் பகுதியில் இருந்து 3 கி.மீ., தொலைவில் அமைந்துள்ளது.

## VIGNESH GRAPHICS

*All Kinds of Printing Solution*



- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.

Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards

RNI No. TNBIL / 2012 / 46449
Postal Regn. No. : TN / MA / 145 / 2022-2024
Printed Matter

Date of Posting : 20.01.2024 / BPC MDU
WPP No. TN / WPP -165 /SR / 2022 - 2024
Date of Publication 20th of Every Month

0452 231 2293 98409 60846 / 90479 50885

# UG CHEMI JAGSAN
# U G கெமி ஜாக்சன்




(Innovators in Construction Admixtures &
Promoters of Geo Polymer Concrete - Concrete without Cement)

5A, New No : 17, Room No : 3, Pankajam Colony 4th Cross Street Madurai:625 009
E mail : info@ugchemijagsan.com / Web : www.ugchemijagsan.com



# வேல் மருத்துவமனை
## வேல் சிறப்பு எலும்பியல் மையம்

Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




**சிறப்பம்சங்கள்**
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

*Experience the Expertise Advice*

**உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்**
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

# கைத்தறியில் ஓர் புதுமை
## Electronic Jacquard




**Technical Details :**
- Product from India' most Trusted name in Looms and Jacquard Machines.
- No of Hooks : 480, 680, 960, 1280 Hooks
- Max Speed : 200 to 550 RPM
- Max Shedding : 75 to 110 mm










**Applications :**
• Sarees • Bed Sheets • Furnishing • Dress Material
• Blankets • Made Ups • Shirting


N.S. Rajan

# SRE CORPORATION
359, Balaji Nagar, Tank Road, Opp. Ulavar Santhai,
Singanallur, Coimbatore - 641 005.
Mobile : 98432 60553, 98422 33645, 98430 460 64, 97876 76494
Email : sre_tex@yahoo.com, sretex@gmail.com


T.S. Saravanan

*Official Publication:*
**SOURASHTRA CHAMBER OF COMMERCE**
136, II Floor, East Veli Street, Madurai - 625001.
Ph: 0452 2629955, Cell: 9344197952
Email: sourashtra.chamber@gmail.com
Web: www.sourashtrachamber.org